*29*

# அன்பு, கண்ணீர் மற்றும் மன்னித்தல்

## லூக்கா 7:36–50, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*இயேசு பிறருடன் உண்பதை விரும்பினார். அவர் தமது சீஷர்களுடன் உண்டார் (மாற். 14:14; லூக். 22:15). அவர் தமது நண்பர்களுடன் உண்டார் (லூக். 10:38-42; யோவா. 12:1, 2). அவர் ஆயக்காரர்களுடனும் பாவிகளுடனும் உண்டார் (லூக். 5:29, 30). அவர் பரிசேயர்களுடனும் கூட உண்டார் (லூக். 11:37-54; 14:1-6). நாம் அறிந்த வரையிலும், உணவு உண்பதற்கான எந்த ஒரு அழைப்பையும் கிறிஸ்து ஒருக்காலும் புறக்கணித்ததில்லை.[1]*

*லூக்கா 7:36-50 வசனப் பகுதியானது, இயேசு முதன்முறையாக ஒரு பரிசேயருடன் உண்பதற்கு அழைக்கப்பட்டிருந்தது பற்றிக் கூறுகிறது. நிகழ்ச்சிகளின் திகைப்பூட்டும் திருப்பமானது, அன்பு மற்றும் மன்னித்தல் பற்றி இயேசுவினால் தரப்பட்ட செய்திகளில் மிகவும் நெஞ்சைத் தொடும் ஒரு செய்தி எழும்புவதற்கு வாய்ப்பளித்தது.*

### ஒரு குறிப்பிடத்தக்க வேண்டுகோள் (வ. 36அ)

*இவ்வரலாறானது, "பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம் பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்" என்று தொடங்குகிறது (வ. 36அ). சீமோன் என்பது அந்தப் பரிசேயனின் பெயராயிருந்தது (வ. 40, 43, 44). "வேண்டிக்கொண்டான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது மூலமொழியில் அவசரத் தன்மையை ஆலோசனை தெரிவிக்கிறது. அந்த அழைப்பை இயேசு ஏற்றுக்கொள்ளும் வரைக்கும் சீமோன் மீண்டும் மீண்டும் அவரை அழைத்துக்கொண்டே இருந்தார் (வ. 39).*

*தன்னுடன் கிறிஸ்து உணவு உண்ண வேண்டும் என்று சீமோன் பேரார்வம் கொண்டது ஏன்? பல்வேறு கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.*

*ஒருவேளை இந்தப் பரிசேயன் இயேசுவை விரும்பியிருக்கலாம். எல்லா பரிசேயனும் இயேசுவை வெறுக்கவில்லை (யோவா. 7:45-52; லூக். 13:31). விதிப்படி, நாம் மக்களின் நட்புறவை மகிழ்வுடன் அனுபவிப்பதால் அப்படிப்பட்ட மக்களை நமது இல்லங்களுக்கு அழைக்கின்றோம். ஆயினும், தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளைக் காணும்போது, இது சீமோனின்*

நோக்கமாயிருந்திருக்க மிக அரிதாகவே வாய்ப்புள்ளதாகக் காணப்படுகிறது.

இவருடைய நோக்கமானது பிற பரிசேயர்களின் நோக்கத்தைப் போன்றே இருந்திருக்கலாம்: ஒருவேளை இவர் இயேசுவுக்கு ஒரு வலை விரிக்கவோ அல்லது அவரைக் குற்றம் சாட்டக்கூடுவதற்கு சில தவறுகளை அவரிடத்தில் கண்டறியவோ முயற்சி செய்திருக்கலாம். இது சாத்தியமான தாக உள்ளது, ஆனால் சுவிசேஷ எடுத்துரைப்பில், சீமோன் கிறிஸ்துவை அகப்படுத்துவதற்காக வேண்டுமென்றே முயற்சி செய்ததாகச் சுட்டிக் காண்பித்தல்கள் எதுவும் இல்லை.

சீமோனின் நோக்கம், மேலே தரப்பட்டவற்றில் முதல் இரு ஆலோசனைகளுக்கும் இடையில் ஏதோ ஒரு இடத்தில் இருந்ததாகக் காணப்படுகிறது. இவர், கர்த்தரைப் பற்றித் தமது சக பரிசேயர்கள் கூறியவற்றை நிச்சயமாகவே கேள்விப்பட்டிருந்தார். அதே வேளையில், இவர் அநேகமாக, கிறிஸ்துவைப் பற்றிய வெகுஜனக் கருத்தையும் அறிந்திருக்கலாம். இந்நிகழ்ச்சி நடப்பதற்குச் சற்று முன்னதாக, இயேசு நாயீன் நகரத்தில் இருந்தார், அங்கு மக்கள் "மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார்" என்று ஆச்சரியப்பட்டிருந்தார்கள் (லூக். 7:16).[2] "உண்மையில் இந்த மனிதர் யார்?" என்பதே சீமோன் தம் சிந்தையில் கொண்டிருந்த கேள்வியாகக் காணப்படுகிறது.

இந்த அழைப்பிற்கான பிற காரணங்கள் முன்மொழியப்படுகின்றன,[3] ஆனால் சீமோனின் நோக்கம் எதுவாயிருப்பினும், இயேசு அதைப் பற்றி அறிந்திருப்பார் (யோவா. 2:25). இது இன்னொரு கேள்வியை தூண்டுகிறது: ஐயத்திற்கிடமான இப்படிப்பட்ட அழைப்பை கிறிஸ்து ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? மீண்டும் பல சாத்தியக்கூறுகள் சிந்தைக்கு வருகின்றன.

இயேசு தாம் யார் மற்றும் என்னவாக இருந்தார் என்பது பற்றி சீமோன் நிச்சயமற்ற கருத்துக் கொண்டிருந்ததை அவர் [இயேசு] உறுதியாகவே அறிந்திருந்தார். இவ்விதமாக, அவர் சீமோனுக்கு உதவுவதற்காகச் சென்றிருக்கலாம். உணவு வேளையின்போது, மற்றவர்களும் இருப்பார்கள் (லூக். 7:49ஐக் காணவும்); கிறிஸ்து, அவர்களுக்குப் போதிக்கச் சென்றிருக்க லாம். மற்றும், உணவு வேளையின்போது என்ன நடக்கும் என்பதை இயேசு அறிந்திருக்க வாய்ப்புள்ளது,[4] அவர், ''விருந்தின் இடையில் புகுந்த'' பெண்ணை உற்சாகப்படுத்தும்படிக்கு அங்கு சென்றிருக்கலாம். கடைசி யாக, ஏற்கனவே குறிப்பிட்டபடி, இயேசு மக்களுடன் - எல்லா விதமான மக்களுடன், அவரை எதிர்த்தவர்களுடனும் கூட உண்பதை, பேசுவதை, ஐக்கியம் கொண்டிருப்பதை மகிழ்வுடன் அனுபவித்தார். அவர் தம் சீஷர் கள் தங்கள் விரோதிகள்மீது அன்புகூர வேண்டும் என்று அவர் போதித் திருந்தார் (மத். 5:44); ஒருவேளை அவர் அப்படிப்பட்ட அன்புக்கு நடைமுறைச் செயல்விளக்கம் கொடுத்திருக்கலாம்.

''மேலே கூறப்பட்ட எல்லாவற்றிற்காகவும்'' என்பதே இயேசு ஏன் சீமோன் வீட்டிற்குச் சென்றார் என்பதற்குச் சரியான பதிலாக இருக்கலாம். இயேசு அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு ஒரு பரிசேயருடன் உண்ணச் சென்றார் என்பதே முக்கியமான உண்மையாக உள்ளது.

## *உபசரிப்புத் தன்மையில்லாத ஒரு தனிநபர் (வ. 36ஆ, 44-46)*

*வசனம் 36ன் முடிவுப் பகுதி, "அவர் அந்தப் பரிசேயன் வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்" என்று கூறுகிறது. நாம் இவ்வரலாற்றின் பிற்பகுதியில், இயேசு அவ்வீட்டிற்குள் பிரவேசித்ததற்கும் உணவு மேஜையில் அமர்ந்ததற்கும் இடையில் அதிக சம்பவங்கள் நடந்ததை (அல்லது, நடவாமல் இருந்ததை) அறிகின்றோம்.*

*அந்த நாட்களில், விருந்தினர் ஒருவர் வீட்டிற்குள் வருகையில் குறிப்பிட்ட சில தயவான செயல்கள் அவருக்குச் செய்யப்பட வேண்டும் என்று சமூகப் பழக்கவழக்கங்களும் சூழ்நிலைகளும் கட்டளையிட்டு இருந்தன. முதலாவது, விருந்தளிப்பவர், விருந்தினருக்கு வரவேற்பின் முத்தம் ஒன்று தருவார் (ஆதி. 29:13; 45:15; 2 சாமு. 15:5; 19:39; மத். 26:49; அப். 20:37; ரோமர் 16:16). இது சாதாரணமாகக் கன்னத்தில் தரப்படும் முத்தமாக இருந்தது.*

*பின்பு யாரேனும் ஒருவர், விருந்தினர் தமது பாதங்களைக் கழுவுவதற்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் துடைக்கும் துண்டும் தருவார் (ஆதி. 18:4; நியா. 19:21; யோவா. 13:4, 5; 1 தீமோ. 5:10). அற்பமான இந்தப் பணி பெரும்பாலும் வேலைக்காரர்களால் நிகழ்த்தப்பட்டது. இந்த செயல்பாடு நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தது, ஏனென்றால் மனிதர்கள் அசுத்தமான தெருக்களின் வழியே நடந்து செல்லுகையில் மிதியடிகளை அணிந்தார்கள். இந்தச் சடங்கானது விருந்தினருக்கு வசதியைக் கொடுத்ததோடு, விருந்தளிப்பவரின் இல்லத்தில் இருக்கும் விரிப்புகளையும் மெத்தைகளையும் பாதுகாக்கவும் செய்தது.*

*பொதுவானதாக இல்லாவிடினும் மூன்றாவதான ஒரு தயவுள்ள செயலானது, மதிக்கத்தக்க விருந்தினர்களுக்கு அடிக்கடி அளிக்கப்பட்டது: தலை மற்றும்/அல்லது முகத்திற்கு எண்ணெய் அல்லது தைலம் அளித்தல் (சங். 45:7; 92:10; 104:15; 141:5; பிர. 9:8; ஆமோ. 6:6 ஆகியவற்றைக் காணவும்). விருந்தினர், சுட்டெரிக்கும் சூரியனின் கீழ் பல மணி நேரங்களைச் செலவிட்டு இருந்தால், இரக்கத்தின் இந்த வெளிப்பாடானது வரவேற்பதாகவும் புத்துணர்வூட்டுவதாகவும் இருக்கும்.*

*இயேசு சீமோனின் வீட்டை அடைந்தபோது, இந்த வசதிகளில் எது ஒன்றும் அவருக்கு அளிக்கப்படவில்லை. பிற்பாடு அவர் தமக்கு விருந்தளித்தவரை நோக்கி, "நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை … நீ என்னை முத்தஞ் செய்யவில்லை … நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை … ." என்று கூறினார் (வ. 44-46). மற்ற விருந்தினர்களும் [இதேபோல்] புறக்கணிக்கப்பட்டதற்கான குறிப்பு எதுவும் இருப்பதில்லை (வ. 49). வசனம் 44முதல் 46வரை உள்ள பகுதியில் இருக்கிற "என்னை" மற்றும் "என்" என்ற வார்த்தைகள், கிறிஸ்து மாத்திரமே இந்த மும்மடங்கு அவமானத்தைப் பெற்றார் என்பதை மறைமுகமாக எடுத்துரைக்கின்றன.*

*ஒரு கணநேரத்திற்கு, நீங்கள் உங்களை இயேசுவின் இடத்தில் வைத்துப்*

பாருங்கள். நீங்கள் சீமோன் வீட்டில் உணவு உண்ணும்படி அழைக்கப் பட்டு இருக்கின்றீர்கள். உண்மையில் இவ்வழைப்பானது, இதை உங்கள் வேலை அட்டவணையில் நீங்கள் பொருந்தச் செய்யும்வரைக்கும் மீண்டும் மீண்டும் விடுக்கப்பட்டிருந்தது. ஆயினும், நீங்கள் அவரது வீட்டிற்குச் சென்றபோது, உங்களை விருந்திற்கு அழைத்தவர் உங்களை மரியாதைக் குறைவாக நடத்துகின்றார். அவர் மற்ற விருந்தினர்களை ஆர்வத்தோடு வாழ்த்துகின்றார், தமது கைகளை அவர்களின் தோள்களைச் சுற்றிப் போட்டு அணைத்து அவர்களுக்கு முத்தம் தருகின்றார், அவர்கள் தங்கள் பாதங்களைக் கழுவும் இடம் எங்குள்ளது என்று காண்பிக்கின்றார் மற்றும் அவர்களின் தலையை [எண்ணெயால்] அபிஷேகம் செய்கின்றார். அந்த நேரம் முழுவதிலும் நீங்கள் ஒரு ஓரமாய் நின்று கொண்டிருக்கின்றீர்கள், நீங்கள் உணவு உண்பதற்கான வேளை வரும் வரைக்கும் கவனிக்கப் படாமல் ஒதுக்கப்பட்டு இருக்கின்றீர்கள். எங்கு அமரலாம் என்று ஒருவேளை உங்களுக்குக் கூறப்பட்டிருக்கலாம் - அல்லது அதுவும் உங்களுக்குக் கூறப்படாதிருக்கலாம். ஒருவேளை ஒவ்வொருவரும் இடத்தில் அமரும் வரையில் நீங்கள் காத்திருந்து, மீதியாக விடப்பட்ட இடத்தில் அமர வேண்டியிருந்திருக்கலாம்.

நீங்கள் எப்போதாவது, பகையுணர்வு கொண்ட தனிநபர்களால் அல்லது குறைந்தபட்சம் நட்புணர்வற்ற மற்றும் பரிவிரக்கமற்ற மக்களால் சூழப்பட்டு இருந்துள்ளீர்களா? நீங்கள் எப்போதாவது இருந்த இடத்தை விட்டு வேறு எங்காவது இருந்தால் நல்லது என்று உணர்ந்திருக்கின்றீர்களா? நான் நினைவுகூருவதற்கு அக்கறை கொள்வதைக்காட்டிலும் அதிகமான முறைகள் இப்படிப்பட்ட வசதியற்ற அனுபவத்தைப் பெற்றிருந்துள்ளேன்.[5] இயேசு சீமோன் வீட்டில் இதேபோன்றே அனுபவத்தைக் கொண்டிருந் தாரா? அவ்வாறு கொண்டிருந்தார் என்றால், அது அவர் அங்கிருந்த நோக்கத்திலிருந்து அவரைச் சிதைத்து விட அவர் அனுமதிக்காதிருந்தார்.

## அழுதுகொண்டிருந்த ஒரு பெண்
## *(வ. 36-39, 44-46)*

இவ்வரலாற்றை நாம் தொடர்ந்து படிக்கும் முன்பு, சில விளக்கங்கள் தேவைப்படுகின்றன. இயேசு "பந்தியிருந்தார்" (வ. 36) என்ற கூற்றினால் அர்த்தப்படுவது என்ன? அழைக்கப்படாத ஒரு விருந்தாளி (பாவியாயிருந்த பெண்) அந்த விருந்தினூடே சிறிதளவே சிரமத்துடன் இடைநுழைய முடிந்தது (வ. 37) எவ்வாறு? அவள் அங்கு வந்து சேர்ந்தபோது, இயேசுவின் தலைக்குப் பதில் அவரது பாதத்தை அவள் அபிஷேகித்தது (வ. 38) ஏன்? நாம் காட்சியை அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

முதலாவது, பந்தி மேஜையைச் சுற்றிலும் இருந்த விருந்தினர்களை உங்கள் சிந்தையில் காணுங்கள். ஒருவர் தமது இடப்புறம் சாய்ந்து, இடது முழங்கையின் ஆதாரத்தில் சாய்மானமாக இருப்பது என்பதுதான் வழக்க மான அமரும் நிலையாக இருந்தது. இது, வலது கையை உணவை எடுத்து உண்பதற்கு அனுமதித்தது. தலையானது உணவை நோக்கியவாறு

*இருக்கும், பாதங்கள் புறம்பே நீட்டிக் கொண்டு இருக்கும். மற்ற இரு விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்: காலணிகள் கதவருகே விடப் பட்டிருந்தபடியால் பாதங்களில் எதுவும் அணிவிக்கப்படாது இருந்தன, மற்றும் ஆண்கள் தவிர வேறு யாரும் அங்கிருக்கவில்லை. பரிமாறவும், பொழுதுபோகச் செய்யவும் மாத்திரம் விருந்துகளில் பெண்கள் அனுமதிக் கப்பட்டிருந்தார்கள்.[6]*

*அடுத்து, கிழக்கு நாடுகளில் தரப்படும் ஒரு விருந்தின் பொதுவான கிளர்ச்சியைக் கண்ணோக்குங்கள். பேச்சும் சிரிப்பும் அங்கிருந்தது. வேலைக் காரர்கள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள் - அவர்கள் பாத்திரங்களை நிரப்புவதும், ஒரு உணவு வகையை எடுத்துவிட்டுப் பின் அடுத்ததைக் கொண்டு வருவதுமாக இருந்தார்கள். விருந்து நடத்தப்பட்ட அறை அல்லது முற்றத்தின் சுவர் ஓரமாகச் சுற்றிலும், ஆர்வத்துடன் உற்றுநோக்கிய வர்களும் இருந்திருக்கலாம். மேற்கத்திய உலகத்தில்[7] நாம் அறிகின்ற வகையிலான தனிப்பட்டிருத்தல் என்பது அந்தக் காலத்தில் கிழக்கத்திய உலகில் சார்பு நிலையில் அறியப்படாததாக இருந்தது. ஒரு விருந்தின்போது, அதிலும் விசேஷமாக, அங்கு புகழ்பெற்ற நபர் ஒருவர் விருந்திற்கு வந்திருந்தாரென்று அறிய நேர்ந்தால், பார்வையாளர்கள் நடுவில் நுழைந்து வருதல் என்பது அசாதாரணமானதாக இருந்ததில்லை. ஆகையால், சீமோனின் விருந்துக்கூட்டத்தின் மத்தியில், அழைக்கப்படாத பாவியொருத்தி திடீரென்று வந்து சேர்ந்தது என்பது சார்பு நிலையில் சுலபமானதாகவே இருந்திருக்கும்.*

*இந்த உண்மைகளை நமது சிந்தையில் கொண்டு, நாம் வேதபாடப் பகுதியைத் தொடருவோம்: "அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ, அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து" (வ. 37).*

*இந்தப் பெண், ''பாவி'' என்று அழைக்கப்பட்டாள். எனது* NASB *வேதாகமப் பிரதியில் பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது: ''அதாவது, ஒழுக்கவீனமான ஒரு பெண்." பிற்பாடு இயேசு அவளிடத்தில், "அநேக" பாவங்கள் இருந்ததாகக் கூறினார் (வ. 47). அவளது பாவங்கள் எவைகளாயிருப்பினும், அவைகள் நன்கு அறியப்பட்டிருந்தன; அவள் ஒரு கெட்ட பெயர் எடுத்திருந்தாள் (வ. 39). வசனம் 37ல் உள்ள "பாவி" என்ற வார்த்தையானது, "வேசி" என்பதற்கு ஒரு அலங்காரச் சொல்லாக இருந்தது என்று பல விளக்கவுரையாளர்கள் முடிவு செய்கின்றார்கள்.[8]*

*கெட்ட பெயர் எடுத்திருந்த பாவியான இந்தப் பெண், இயேசு யார் என்றும் தனது வாழ்வானது அவரால் திருப்பப்பட்டிருந்தது என்றும் அறிந்தாள் என்பது தெளிவு.[9] இவ்விருவரும் இதற்குமுன்பு முகமுகமாகச் சந்திக்காமல் இருந்திருக்கலாம்,[10] ஆனால் இவள், அவர் பேசுவதைக் கேட்பதற்குப் பல வாய்ப்புகளைப் பெற்றிருந்திருக்கக் கூடும்.[11] இவள், பாவிகள் மீதும் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் மீதும் அவரது அன்பைக் கண்டிருந்தாள் (மத். 11:5, 19). இவள் அவரது மென்மையான அழைப்பைக் கேட்டிருக்கலாம்:*

*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறு தல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது (மத். 11:28-30).*

*இயேசுவைக் காணவேண்டும் என்ற இவளது பலத்த விருப்பமும், எல்லாரும் ஆண்களாகக் கூடியிருந்த அக்கூட்டத்தைப் பிளந்து செல்வதற் கான தைரியமும், அவள் சிந்திய கண்ணீரும் (வ. 37, 38) - இவை யாவும் இந்தப் பெண்ணின் இருதயத்தில் நிறைந்திருந்த வல்லமை நிறைந்த உணர்வுகளுக்கு ஆதாரமாக இருக்கின்றன. இவள் கிறிஸ்துவைப் பற்றி அறியும்முன்பு இவளுக்கிருந்த நம்பிக்கையற்ற தன்மையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்: ஒவ்வொரு புதிய நாளின் பயங்கரம், பிறரிடம் அவளுக்கிருந்த வெறுப்புணர்வு, தன்னைத்தானே அருவருத்தல். பின்பு அவள் இயேசுவின் உரையைக் கேட்டிருந்தாள், மற்றும் சத்தியத்தின் வெளிச்சம் இவளது சிந்தையில் இருந்த இருளைத் துரத்தியிருந்தது. தேவன்மீது நம்பிக்கையின்மை என்பதற்குப் பதில் விசுவாசம் (வ. 50) வந்திருந்தது; லௌகிக துக்கத்திற்கு(2 கொரி. 7:10)ப் பதிலாக தேவனுக் கேற்ற துக்கம் (வ. 38) வந்திருந்தது. இவளது வாழ்வு மாறியிருந்தது! இது முன்பு போன்றதாக இனி ஒருக்காலும் இராது!*

*இவளிடத்தில் ஒரு விஷயம் குறைவுபட்டிருந்தது என்பது உறுதி: இவள் தனது பாராட்டுதலை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பு. இயேசு அந்தப் பகுதியில் இருந்தார் என்பதை இவள் அறிந்தபோது, இவள் பரிமளத்தைலம் நிறைந்த பரணி ஒன்றை எடுத்துக்கொண்டு சீமோனின் வீட்டிற்குத் துரிதமாய்ச் சென்றாள் - ஒருவேளை இத்தைலம் ஒரு காலத்தில் இவளது தொழிலில் ஒரு ஆயுதமாகப் பயன்பட்டிருக்கும், ஆனால் இப்போதோ இவள் தனது அன்பையும் நன்றியுடைமையையும் வெளிப் படுத்த ஒரு ஊடகமாயிருந்தது.*

*இவள் அந்தப் பரிசேயரின் வீட்டை அடைந்தவுடன், விருந்தின் பரபரப்பிற்கு இடையில், இயேசுவைக் கண்டுபிடிக்கும் வரையில் கூட்டத் தினூடே செல்லுதல் என்பது இவளுக்குக் கடினமாக இருக்கவில்லை. இவள், அவர் இருந்த மேஜையைச் சுற்றி நடந்து சென்றாள். இவள் தனது இரட்சகருக்கு அண்மையில் வந்து நின்றபோது, இவளது உணர்வுகள் பெருக்கெடுத்தோடின மற்றும் இவளது கண்ணீர் மழையெனப் பொழிந்தது.*

*இவளது கண்ணீர்த்துளிகள், பயணத்தால் கறைப்பட்டிருந்த இயேசு வின் பாதங்களில் விழுகையில், அவைகள் அதில் இருந்த தூசியுடன் கலந்திருக்கும். இவள் தனது தலைமுடியை அவிழ்த்து, சேறாயிருந்த பகுதிகளை தனது முடிக்கற்றையினால் துடைக்கத் தொடங்கினாள். முழு வளர்ச்சியடைந்த ஒரு யூதப்பெண், பொது இடத்தில் தனது தலைமுடியை அவிழ்த்துப் போடுதல் என்பது கனவீனமானதாகக் கருதப்பட்டது,[12] ஆனால்*

*எந்த விதமான ஏக்கப் பெருமூச்சுகள் தெளிவாய் அங்கிருப்பினும், இவள் இயேசுவின் பாதங்களைத் தொடர்ந்து துடைத்தாள்.*

*பின்பு இவள் அவரது பாதங்களை முத்தமிடத் தொடங்கினாள். இவள் கர்த்தருடைய பாதங்களை முத்தமிட்டாள் என்று நீங்கள் வாசிக்கும்போது, பகட்டான ஒரு இளவரசரின் மென்மையான, ஒப்பனை செய்யப்பட்ட பாதங்களைப் பற்றி நினைக்காதீர்கள். எல்லா இடங்களுக்கும் கால்களினால் நடந்தே பயணித்து வந்த, ஓய்வற்ற இந்தப் போதகரின் முரடான, காய்ப்பேறிய, விரிவுகண்ட பாதங்களை நினைத்துப் பாருங்கள் - அதிலும் இந்த வேளையில், அவைகள் கலிலேயப் பாதைகளின் தூசி மற்றும் குப்பைகளினால் இன்னும் அடையாய் அழுக்கேறியிருந்தன. வசனம் 45ன்படி, இவள் அந்த அழுக்கான பாதங்களை மீண்டும் மீண்டும் முத்த மிட்டாள். கடைசியாக, இவள் தனது பரணியை எடுத்து, அதைத் திறந்து,[13] அதிலிருந்த பரிமளத் தைலத்தை அவரது பாதங்களில் ஊற்றத் தொடங்கினாள்.*

*இந்தச் செயலானது சீமோனின் விருந்தின்மீது கொண்டிருந்த செயல்விளைவைக் கற்பனை செய்தல் என்பது கடினமானதாக இருப்ப தில்லை. பரிசேயர்கள் பொது இடங்களில் பெண்களிடம் ஏதொன்றும் பேசுவதும் இல்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த சமுதாயத்தில் இந்தப் பெண்ணுக்கிருந்த பாவம் நிறைந்த அவகீர்த்தியை நினைவில் வையுங்கள். இத்துடன் இந்த பெண், அழுது, துடைத்து, ஊற்றியதில் - மற்றும் இவள் தனது கூந்தலை தளரவிட்ட தன்மானமற்ற செயலைக் குறிப்பிடவும் தேவையில்லை - இவளது சட்டத்திற்குப் புறம்பான நடக்கையைக் கூட்டிக்கொள்ளுங்கள். உரையாடல்கள் உலர்ந்து போயின, ஒவ்வொரு கண்ணும் இந்தப் பெண்மீதும் இயேசுவின் மீதும் பதிந்தன என்பதில் சந்தேகம் இல்லை.*

*இந்தச் சூழ்நிலையின் விவரங்கள் கிறிஸ்துவை எவ்வகையில் பாதித்தன? அவர் இந்தப் பெண் தமது பாதங்களில் கண்ணீரைச் சிந்து வதற்கு முன்பு இவளைக் கண்டிருந்தாரா? நன்றியுடைமைக்கு இவள் காட்டிய மட்டுமீறிய மற்றும் பழமைவாதமற்ற வெளிப்படுத்துதல்களுக்கு இவரது பதில்செயல் என்னவாக இருந்தது?*

*கிறிஸ்துவின் தொடக்கப் பதில்செயல் குறித்து நாம் உறுதியாய் எதுவும் கூறமுடியாது, ஆனால் சீமோன்மீது விளைவிக்கப்பட்ட பாதிப்பைப் பற்றி நமக்குக் கூறப்படுகிறது. அந்தப் பரிசேயன் அநேகமாக, தன் வீட்டில், ஏற்புடையதல்ல என்று தான் கருதிய காட்சியொன்றினால் சங்கடம் அடைந்து இருக்கலாம் - ஆனால் அவர் குறிப்பான ஒரு திருப்தியினாலும் நிரப்பப்பட்டார். இயேசு எவ்வகைப்பட்ட நபராயிருந்தார் என்பது பற்றி அவர் [பரிசேயன்] கேள்விகள் எதுவும் கொண்டிருந்தால், அந்தக் கேள்விகள் பதில் அளிக்கப்பட்டு விட்டன. "அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, 'இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்" (வ. 39).*

*சீமோனைப் பொறுத்தவரையில், உண்மைகள் சாத்தியமான இரண்டு*

*முடிவுகளை மட்டுமே அனுமதித்தன: ஒன்று, அந்தப் பெண் எப்படிப் பட்டவள் என்பதை இயேசு அறியாதிருந்தார், எனவே அவர் ஒரு தீர்க்கதரிசியல்ல,*[14] *அல்லது இவள் யார் என்பதை அறிந்திருந்தும் அவர்* [இயேசு] *அக்கறையற்று இருந்தார். பிந்திய விஷயம் உண்மையாக இருக்கும் என்றால், அவர்* [இயேசு] *ஒரு நல்ல மனிதராக இருக்கமாட்டார்.*[15] *இவள் யார் என்பதையும் இவள் என்னவாக இருந்தாள் என்பதையும் இயேசு அறிந்திருந்தார் என்பதை சீமோன் உணர்ந்தறியவில்லை. அவர்* [இயேசு], *சீமோன் யார் மற்றும் என்னவாக இருந்தார் என்பதையும் அறிந்திருந்தார் - அவரை அங்கிருந்த அனைவருக்கும் வெளிப்படுத்தவிருந்தார்.*

## *ஒரு எளிய கதை (வ. 40-50)*

*தமக்கு விருந்தளிப்பவரின் சிந்தனைகளை அறிந்த "இயேசு அவனை நோக்கி: 'சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும்' என்றார்" (வ. 40அ). அந்தப் பரிசேயனைப் பொறுத்தமட்டில், நாடகம் முடிந்து விட்டது, புதிர் விடையளிக்கப்பட்டு விட்டது. அவர், ''போதகரே,*[16] *சொல்லும்'' என்றபோது (வ. 40ஆ), அவரது குரலில் இருந்த வஞ்சப் புகழ்ச்சியை நீங்கள் ஏறக்குறைய கேட்க முடியும்.*

*பின்பு இயேசு ஒரு எளிய கதையைக் கூறினார், இது இரண்டே இரண்டு வாக்கியங்கள் கொண்ட ஒரு நிகழ்வுக் கதையாக இருந்தது. இது மூன்று பாத்திரங்களுடன், குறைந்தபட்சக் கதைக்கருவைக் கொண்டுள்ளது: "ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும்,* (denarii[17]) *மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான்'' (வ. 41, 42அ). ஒரு வெள்ளிக்காசு* (denarius) *என்பது சாதாரண உழைப்பாளியின் ஒரு நாள் கூலியாக இருந்தது (மத். 20:2ஐக் காணவும்). இவ்விதமாக, கடன்பட்டிருந் தவர்களில் ஒருவர் ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கான கூலிக்குச் சமமான பணத்தைக் கடனாக அடைக்க வேண்டியிருந்தது, இன்னொரு வரோ தாம் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் சம்பாதிக்கக் கூடிய கூலிக்குச் சமமான பணம் கடன்பட்டிருந்தார்!*[18]

*நீங்கள் ''ஒருவனிடத்தில்''* [*ஆங்கிலத்தில் இங்கு* "Money lender" *என்றுள்ளது*] *என்று வாசிக்கும்போது உங்கள் அண்மையில் உள்ள வங்கியாளரை (இவர் ஏறக்குறைய நட்புறவாகவே இருப்பார் என்று நான் நம்புகின்றேன்) நினைக்காதீர்கள். மாறாக, பணத்தை வாரி எடுக்கிற, இருதய கடினமுள்ள, கல்லான முகங்கொண்ட குணங்கள் உடைய ஒரு நபரைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: இவர் ஏழைகளை இரையாகப் பிடிக்கிற நபராக, ஏராளமான வட்டியை வசூலிக்கிறவராக, மற்றும் காலாகாலத்தில் பணத்தைத் திருப்பித்தராதவர்கள்மீது இரக்கமற்றவராக இருக்கின்றவர்.*

*கதையைத் தொடர்ந்து கிறிஸ்து, ''இப்படியிருக்க, அவர்களில்* [*கடன்பட்ட இருவரில்*] *எவன் அவனிடத்தில்* [*கடன் கொடுத்தவனிடத்தில்*] *அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல்" என்று கேட்டார் (வ. 42ஆ).*[19]

*அன்றும் இன்றும் கடன் கொடுப்பவர்கள் பெரும்பாலும் சீற்றமான ஒலியுடன், ''எனக்கு அன்பு ஒன்றும் தேவையில்லை. எனக்குத் தேவையானது பணம்'' என்றே கூறுவார்கள்.*

*ஒரு கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை என்பது எப்போதுமே கவலைக்குரிய ஒரு விஷயமாகவே இருந்துள்ளது.[20] மத்தேயு 18:23-35 வசனப்பகுதியானது, தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத மனிதர்கள் சிறையில் அடைக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டதைப் பற்றிக் கூறுகிறது. ஆகையால் இயேசுவின் எளிய கதையானது, அந்தக் கடன் கொடுத்தவர் அவ்விருவரின் கடன்களையும் மன்னித்துவிட்டார் என்று கூறியபோது எதிர்பாராத திருப்பத்தை அடைந்தது. கடன்காரர்கள், கடன் வாங்கியவர்களின் கால்களை முறித்தல் அல்லது விலா எலும்புகளை உடைத்தல் ஆகியவற்றினால் அறியப்பட்டுள்ளார்கள், ஆனால் அவர்கள் ''என்னிடம் நீ வாங்கிய கடனைப் பற்றிக் கவலைப்படாதே. அதை மறந்துவிடு!'' என்று கூறுவது மிகவும் அரிது. ஆயினும், கிறிஸ்துவின் உவமையில் வந்த கடன்கொடுப்பவர் அதையே செய்தார்.[21]*

*பின்பு இயேசு சீமோனிடம் திரும்பி, "இப்படியிருக்க, அவர்களில் [மன்னிக்கப்பட்ட இரண்டு கடனாளிகளில்] எவன் அவனிடத்தில் [மன்னித்துவிட்ட கடன் கொடுத்தவனிடத்தில்] அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல்" என்று கேட்டார் (வ. 42ஆ). அந்தப் பரிசேயனுக்கு அநேகமாக சலிப்பு ஏற்பட்டு இருக்கும். அவரது சிந்தையில், இந்தக் கதையானது சந்தேகத்திற்கு இடமின்றி மதியற்றதாகவும், இந்தக் கேள்வியானது நகைக்கத்தக்க வகையில் எளியதாகவும் இருந்தது. அவர் [பரிசேயன்], "எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கின்றேன்" (வ. 43அ) என்று பதில் அளிக்கையில், அவரது குரலில் இருந்திருக்கும் அருள்புரியும் தன்மையை நீங்கள் ஏறக்குறைய கேட்க முடியும்.*

*அவரிடத்தில் இயேசு, "சரியாய் நிதானித்தாய்" என்று கூறினார் (வ. 43ஆ). "நிதானித்தாய்" என்ற வார்த்தையை அடிக்கோடிடுங்கள். சீமோன் வெறும் பதிலைமட்டும் தந்திருக்கவில்லை; அவர் ஒரு தீர்ப்பை அறிவித்திருந்தார் - அது தம்மீதான ஒரு தீர்ப்பாகவே இருந்தது. அவரது சொந்த வார்த்தைகளே அவரைக் குற்றம் உணர்த்தும்.*

*இந்தப் பெண்ணிடத்தில் திரும்பிய கிறிஸ்து அப்பரிசேயனிடத்தில், "இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே" என்று கூறினார் (வ. 44அ). சீமோன், "என்ன ஒரு மதியீனமான கேள்வி! என்னால் இவளைப் பார்க்காமல் இருக்க முடிவது எப்படி? இவள் எனது உணவு விருந்தளிப்பை அழித்திருக்கின்றாள்! இயேசுவின் பதில்செயல் என்ன என்பதை அறிய நான் விரும்பாதிருந்தால், இவளை உடனே வெளியே துரத்தியிருப்பேனே. நிச்சயமாகவே நான் இவளைப் பார்க்கின்றேன்!" என்று நினைப்பதை நான் கற்பனை செய்ய முடிகிறது. இருப்பினும், அந்தப் பரிசேயன் இவளை உண்மையில் பார்த்திருந்தது இல்லை, அவ்வாறு பார்த்திருந்தாரா? இவள் (கடந்த காலத்தில்) எவ்வாறு இருந்திருந்தாள் என்பதில் அவரது கண்கள் நிறைந்திருந்தபடியால், [இப்பொழுது] இவள் எவ்வாறு இருந்தாள்*

*என்பதை அவரால் காண முடியவில்லை. டென்னீஸன் என்ற கவிஞர் பின்வரும் கவலைமிகுந்த வார்த்தைகளை எழுதினார்: "ஒரு மனிதன் மனந்திரும்புவதை உலகம் நம்புவதில்லை."*[22]

*இந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டே, சீமோனிடத்தில் பேசிய இயேசு பின்வருமாறு தொடர்ந்து கூறினார்:*

> *நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ் செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள் (வ. 44ஆ-46).*

*இயேசு சொன்ன கதையைப் பின்பு அவர் நடைமுறைப்படுத்தினார்: "ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்; இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்" (வ. 47).*

*வசனங்கள் 41, 42ல் உள்ள உவமைக்கு நாம் பின்திரும்புவோம். பார்ட்டன் காஃப்மேன்*[23] *என்பவர் பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை கருத்தாகத் தெரிவித்தார்:*

> *கடன் கொடுத்தவர் = நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து*
> *500 வெள்ளிக் காசு கடன்பட்டவர் = பாவம் நிறைந்த பெண்*
> *50 வெள்ளிக் காசு கடன்பட்டவர் = பரிசேயன்*
> *இருவரும் திருப்பிச் செலுத்த முடியாமை = அழிவுள்ள எந்த ஒரு மனிதரும் தமது பாவங்களில் மிகவும் அற்பமானவைகளுக்குக் கூடப் பரிகாரம் செலுத்த முடியாமை.*
> *இருவரையும் அவர் இலவசமாய் மன்னித்து விட்டது = எல்லாருக்கும் மன்னிப்பிற்கான வழிவகையை அளிப்பதில், தகுதியற்றவர்களுக்குத் தேவன் தரும் தயவு.*

*ஒரு உவமையின் ஒவ்வொரு விவரத்திற்குமான தனிச்சிறப்பான கருத்தைக் கண்டறிவதில் ஒருவர் மிகுந்த முன்னெச்சரிக்கையைப் பயன்படுத்த வேண்டும். (உதாரணமாக, இந்த நிகழ்ச்சியில், கர்த்தர் ஒரு வெறுப்பூட்டும் காசுக்கடைக்காரரின் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை.*[24]*) இருந்தபோதிலும், இங்கு கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட இணைவுகள் ஆர்வத்திற்குரியவைகளாக உள்ளன.*

*காஃப்மேனின் நடைமுறைப் பயன்பாடு மிகச் சரியானதென்றால், கடன்களில் இருந்த வித்தியாசம் என்று குறிப்பிடப்படுகின்ற 450 வெள்ளிப் பணம் என்பது சீமோனின் மதிப்பீட்டில் இருந்திருக்க வேண்டும். அந்தப் பரிசேயன் நிச்சயமாகத் தம்மை, அந்தப் பாவம் நிறைந்த பெண்ணைக் காட்டிலும் பத்து மடங்கு மேன்மையானவராக - அவ்வாறில்லையென்றால்*

நூறுமடங்கு அல்லது ஆயிரம் மடங்கு மேன்மையானவராகக் கருதியிருப்பார். உண்மையிலேயே அவர் மேன்மையானவராக இருந்தாரா? இந்தப் பெண் மாம்சத்தின் பாவங்களினால் குற்றப்பட்டிருந்தாள், அவரோ ஆவியின் பாவங்களினால் குற்றப்பட்டிருந்தார். இவள் [செய்யக் கூடாதவற்றைச்] செய்த பாவத்தினால் குற்றப்பட்டிருந்தாள், அவரோ [செய்ய வேண்டியவற்றைச்] செய்யாமல் இருந்த பாவத்தினால் குற்றப் பட்டிருந்தார். இவள் அநேகமாக ஒரே ஒரு பாவத்திற்காகக் குறிப்பிடப் பட்டவளாயிருந்தாள், பரிசேயனோ தமது பாவங்களைப் பெருக்கியிருந் தார்: அவர் மேட்டிமையினால், சுயத்தை மையங் கொண்டிருத்தலினால், சுயநீதியினால், தப்பெண்ணத்தினால், ஆவிக்குரிய பார்வையற்ற தன்மையி னால் மற்றும் மாய்மாலத்தினால் குற்றப்பட்டிருந்தார்.

இந்த உவமையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டவட்டமான தொகைகள் முக்கியமற்றவைகளாக உள்ளன. கடன்பட்டவர்கள் இருவருமே "திருப்பிச் செலுத்த இயலாதவர்களாக'' இருந்தார்கள் என்பதே முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது (வ. 42). நாம் யாவரும் பாவிகளாக இருக்கின்றோம் (ரோமர் 3:23), நம்மில் எவரும் தமது பாவக் கடனை அடைக்கப்போதுமான அளவு நற்செயல்கள் செய்ய முடியாது (ரோமர் 6:23அ). நாம் ஒவ்வொரு வரும் நமக்கு இவ்வளவு அதிகமாகக் கொடுத்துள்ள ஒருவர் முன்னிலையில் வெறுங்கையர்களாக நிற்கின்றோம்.

நாம் கொண்டுள்ள நம்பிக்கை என்ன? கர்த்தருடைய கிருபைத் தன்மையிலேயே நமது நம்பிக்கை உள்ளது. விதிப்படியாக, கடன் கொடுக்கின்றவர்கள் இரக்கம் நிறைந்தவர்களாக இருப்பதில்லை - ஆனால் தேவன் இரக்கம் நிறைந்தவராக இருக்கின்றார். பவுல் கூறியபடி, "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும்'' உண்டாவதாக (1 தீமோ. 1:2; 2 தீமோ. 1:2).

''இந்த உவமையானது ஒரு நபரின் வாழ்வில் உள்ள பாவத்தின் அளவைக் குறித்துச் செயல்படுவதாக இராமல், பாவம் உண்டென்று அவர் தம் இருதயத்தில் *அறிதல் குறித்துச்* செயல்படுவதாக உள்ளது.''[25] இந்தப் பெண், தனது பாவத்தின் ஏராளமான தன்மை பற்றி ஆழமாய் அறிந்திருந் தாள். இது அவளது கண்ணீரினால் மெய்ப்பிக்கப்பட்டது. கிறிஸ்துவின் மீதான இவளது அன்பு பெருக்கெடுத்தோடிற்று. இதற்கு நேர்மாறாக, சீமோன் தனது சொந்தப் பாவங்கள் பற்றி அறியாதவராக, குற்ற உணர்வடையாதவராக, அன்பை வெளிப்படுத்த வேண்டிய கடமை உணர்வற்றவராக இருந்தார். "பாவமில்லை என்ற உணர்வுடன் இருத்தலே மாபெரும் பாவமாக உள்ளது'' என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[26]

இயேசுவின் குற்றச்சாட்டிற்கு, அவரை விருந்துக்கு அழைத்தவர் எவ்விதம் பதில் அளித்தார்? ஒருவேளை, அந்தப் பரிசேயர் பேச்சற்றுப் போயிருப்பார். குறைந்தபட்சம் பதில்செயல் எதைப் பற்றியும் பதிவு ஒன்றும் இல்லை.

பின்பு கிறிஸ்து முதன்முறையாக இந்தப் பெண்ணிடத்தில் நேரடியாகப் பேசினார்: "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது'' (வ. 48). அவர், "உன்

*பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன" என்று கூறவில்லை, ஆனால் "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்றே கூறினார். ஏற்கனவே கருத்துத் தெரிவிக்கப்பட்டபடி, இவளது பாவங்கள் கடந்தகாலத்தில் மன்னிக்கப் பட்டிருந்தன, ஆனால் அந்த மன்னிப்பை இயேசு மீண்டும் இவளுக்கு உறுதிப்படுத்தினார். எருசலேம் வேதாகமம் என்ற புத்தகமானது, இயேசு "... இவளது பாவங்கள், இவளது பல பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப் பட்டுள்ளன, இல்லையென்றால் இவள் இவ்வளவு மாபெரும் அன்பைக் காண்பித்திருக்க மாட்டாள்" என்று கூறியதாக மேற்கோள் காண்பிக்கிறது (வ. 47).*

*அன்பு என்பது நாம் மன்னிப்பை அடைவதில் முக்கியமான பாகமாக உள்ளது (யோவா. 14:15; 1 யோவா. 5:3), ஆனால் மன்னிக்கப்படுதலை மதித்தல் என்பது அன்பை உண்டாக்கும் என்பதே இவ்வரலாற்றின் வலியுறுத்தமாக உள்ளது: அதிகமாய் மன்னிக்கப்பட்டுள்ளதை அறிகின்றவர் அதிகமாய் அன்புகூருகின்றார், "எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப் படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்" (லூக். 7:47ஆ).*

*இந்தப் பெண்ணின் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று இவளுக்கு இயேசு கூறியபோது, மற்ற விருந்தினர்கள் கலவரம் அடைந்தார்கள், அவர்கள், "பாவங்களை மன்னிக்கிற இவன் யார்?" என்று தங்களுக்குள் முறுமுறுத்தார்கள்[27] (வ. 49ஆ). பாவங்களை மன்னித்தல் என்பது தேவனு டைய சிறப்புரிமை என்ற எண்ணம் அவர்களின் சிந்தையில் இருந்தது.[28]*

*மற்றவர்களைக் கண்டும் காணாதவராக, இயேசு இந்தப் பெண்ணிடத் தில், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறினார் (வ. 50அ). இயேசுவைக் கண்டது மற்றும் அவரது உரையைக் கேட்டது ஆகியவற்றி னால் இவளுக்கு விசுவாசம் வந்திருக்கலாம் (ரோமர் 10:17). இப்போது அந்த விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இவள், கலாத்தியர் 5:6ன் கொள்கையைச் செயல்விளக்கப்படுத்தி இருந்தாள்: "அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்."*

*பின்பு இவளிடத்தில் இயேசு, "சமாதானத்துடனே போ" என்றார் (லூக். 7:50ஆ). நேரடிப் பொருளில் அவர், "சமாதானத்தில் போ" என்று கூறினார்.[29] இவளது கடந்த கால வாழ்வில் இருதயத்திலும் சிந்தையிலும் சமாதானம் இல்லாதிருந்தது, ஆனால் இப்போது இவள் புதியதான தொடக்கம் பெற்றவளாய் இருந்தாள் (2 கொரி. 5:17; ரோமர் 5:1).*

*இந்தப் பெண்ணின் பாவங்களின்மீது கிறிஸ்து விரிவுரையாற்றிக் கொண்டு இருக்கவில்லை என்பதை தெளிவாக்க என்னை அனுமதியுங்கள். அவர் அவற்றை "அநேகம்" என்று அழைத்தார் (லூக். 7:47). இவளது பாவங்களை அற்பமாகத் தள்ளுவதற்குப் பதிலாக, இவளுக்கு அவர் பாவத்தை விட்டு வெளியேறத் தூண்டுதலை அளித்தார். பிற்பாடு ஒரு வேளையில் இயேசு, பாவம் நிறைந்த இன்னொரு பெண்ணை எதிர் கொண்டபோது, அவளுக்குப் பிரியாவிடை கூறுகையில், "இனிப் பாவஞ் செய்யாதே" என்று உரைத்தார் (யோவா. 8:11ஆ). இவ்வேளையில், அதே புத்திமதி மறைவாக உணர்த்தப்பட்டது.*

## அன்பின் மீதான பாடங்கள்

இயேசுவின் கடிந்துகொள்ளுதல் சீமோன்மீது செயல்விளைவு எதையாகிலும் ஏற்படுத்தியதா? இந்தப் பெண் அந்தக் கணத்திலிருந்து தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ்ந்தாளா? நாம் அவ்வாறே நம்புகின்றோம், ஆனால் வேதபாடப் பகுதி இதைப் பற்றி எதுவும் கூறுவதில்லை. வேதாகமம் நமது ஆர்வத்தைத் திருப்திப்படுத்துவதற்காக எழுதப்படவில்லை; இதன் தொடக்க காலப் பங்கேற்பாளர்களை கண்டனம் பண்ணுவதற்கோ அல்லது பாராட்டுவதற்கோ இவ்வரலாறு எழுதப்படவும் இல்லை. மாறாக இது நாம் ஒவ்வொருவரும் நமது இருதயங்களையும் வாழ்வையும் சோதித்தறிவதற்காவே எழுதப்பட்டுள்ளது. நாம் ஒவ்வொருவரும் பின்வரும் கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம்.

(1) எனது பாவத்தின் ஏராளமான தன்மை பற்றி நான் அறிந்திருக்கின்றேனா? சீமோன் மரியாதையுடைமையுடன் கடன் சுமை ஏறப்பெற்றிருந்தார். என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம்: மரியாதையுடைமை என்பது விரும்பப்பட வேண்டியதாகவே உள்ளது, ஆனால் அது நீதிக்குப் பதில் வைக்கப்படுவதற்கு அற்பமானதாக உள்ளது. தனது பாவத்தை ஒப்புக்கொள்ள மனவிருப்பமுள்ள தேவபக்தியற்ற தனிநபருடைய இருதயத்தை அடைவதை விட மதிப்பிற்குரிய பாவியொருவரின் இருதயத்தை அடைதல் என்பது எல்லையில்லா வகையில் கடினமானதாக உள்ளது. நாம் ஒவ்வொருவரும் "என் கடன் மகாப் பெரிதாக உள்ளது, ஓ ஆண்டவரே!" என்று கூறக்கடவோம்.

(2) எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டிருத்தல் என்ற அற்புதமான நிலை பற்றி நான் அறிந்து இருக்கின்றேனா? இந்த வார வேதபாட வாசிப்பில், இயேசு அற்புத செய்கைகள் பலவற்றைச் செய்தார். அவர் ராஜாவின் மனிதனுடைய வேலைக்காரனைக் குணமாக்கியிருந்தார்; அவர் மரித்தவரை உயிரோடே எழுப்பியிருந்தார்; அவர் பல அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார் - ஆனால் அவர் ஒரு ஏழைப் பெண்ணுக்கு மன்னிக்கப்படுதலின் சமாதானத்தைக் கண்டறிய உதவினார் என்பதே மிகவும் அற்புதம் நிறைந்த விஷயமாக இருந்தது.

கடன்பட்டவர்கள் இருவரின் உவமையானது உண்மை நிலையுடன் பூரணமாகப் பொருந்துவது இல்லை என்று நான் ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருந்தேன். இங்கு இன்னொரு உதாரணம் உள்ளது: கடன் கொடுப்பவர் ஒருவர், "இந்தக் கடன் மன்னிக்கப்பட்டது" என்று மட்டும் கூறி, இழப்பை மேற்கொள்ள முடியும். தேவனால் அதைச் செய்ய இயலாது. மாறாக நமது பாவக்கடன் தீர்க்கப்பட வேண்டியதாக இருந்தது - அது அவரது குமாரனின் சிலுவை மரணத்தினால் தீர்க்கப்பட வேண்டியதாயிருந்தது (யோவா. 3:16; 2 கொரி. 5:21; கொலோ. 2:14)! நாம் ஒவ்வொருவரும், "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!" என்று கூறக்கடவோம் (2 கொரி. 9:15).

(3) அதிகமாய் மன்னிக்கப்பட்டுள்ள நிலையில் நான் அதிகமாய் அன்புகூருகின்றேனா? சிலுவையின் வரலாறு சாதாரணமான இடம் பெற்றது என்றால், நமது இருதயங்கள் ஒருக்காலும் பற்றி எரியும் வைராக்கியத்தால்

*நிறையாது. இயேசு நம்மை அன்புகூர்ந்தார் என்பதையும் (ரோமர் 8:37), அவர் தொடர்ந்து நம்மீது அன்புகூருகின்றார் என்பதையும் நாம் புரிந்துகொள்வோமாக (வெளி. 1:5). அவர் மீதான நமது பிரியமானது நாளுக்கு நாள் புதிதாகட்டும். நாம் ஒவ்வொருவரும், "எனது குளிர்ந்த, மிகக் குளிர்ந்த இருதயத்தை அனல்மூட்டும் ஆண்டவரே!" என்று கூறக் கடவோம்.*

*(4) எனது அன்பு விளக்கச் செயலைக் கண்டுள்ளதா? மதித்தல் பற்றிய இந்தப் பெண்ணின் நயப்பாங்கற்ற சைகைகள், சீமோனின் இல்லத்தில் கூடியிருந்த பலருக்குப் புதிராகவும் சங்கடமூட்டுவதாகவும் இருந்திருக்கும். அவளுக்குத் தெளிவான சித்தம் இருந்ததா என்று பலர் வியந்திருக்கலாம். ஆயினும் உண்மையான அன்பு என்பது விலையைப் பற்றி எண்ணுவ தில்லை. அது மட்டுமீறிய செய்கையில் விளக்கச் செயலைக் கண்டறிகிறது. நாம் ஒவ்வொருவரும், "எனது அன்பை நான் காண்பிக்க உதவும் ஆண்டவரே!" என்று கூறக்கடவோம்.*

## *முடிவுரை*

*இந்தப் பிரசங்கத்தின் தொடக்கத்தில், நாம் அறிந்துள்ள வரையில் இயேசு, விருந்திற்கான எந்த ஒரு அழைப்பையும் புறக்கணித்திருந்தது இல்லை என்று நான் குறிப்பிட்டிருந்தேன். இது எனக்கு, வெளிப்படுத்தின விசேஷம் 3:20ல் உள்ள கிறிஸ்துவின் அற்புதமான அழைப்பை நினைவூட்டு கிறது: "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்." இயேசு உங்களுடன் உணவருந்த விரும்புகின்றார், ஆனால் முதலில் நீங்கள் அவரை உங்கள் வாழ்விற்குள் அழைக்க வேண்டும்.[30]*

*நீங்கள் இயேசுவுக்கு அந்த அழைப்பை ஒருக்காலும் விடுக்காதிருந்தால், உங்கள் விசுவாசம் அன்பினால் கிரியை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது (கலா. 5:6ஐக் காணவும்). அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிவதின் மூலம் உங்கள் விசுவாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்துங்கள் (யோவா. 14:15; மத். 7:21). உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புங்கள் (லூக். 13:3); தேவன் "நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத் தையே" விரும்புகின்றார் (சங். 51:17). கர்த்தர்மீது நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு உங்கள் பாவமன்னிப்புக்காக (தண்ணீர் முழுக்கினால்) ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப். 2:38; 8:37).*

*உண்மையற்ற கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் உங்கள் வாழ்வைக் கிறிஸ்துவுக்கு மூடியிருந்தால், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலமாக நீங்கள் அவரை உங்கள் வாழ்வினுள் திரும்ப அழைக்க முடியும் (1 யோவா. 1:9; அப். 8:22; யாக். 5:16). "ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு" (வெளி. 3:19ஆ).*

*இயேசு உங்களுக்காகச் செய்துள்ளவை குறித்து நீங்கள் உங்கள் பாராட்டை ஒருக்காலும் வெளிப்படுத்தாதிருந்தால், அதைச் செய்வதற்கு இதுவே ஏற்ற வேளையாக உள்ளது! (2 கொரி. 6:2ஐக் காணவும்.)*

குறிப்புகள்

*[1]நான் இதைப் பிரசங்கித்தபோது, பின்வரும் நகைச்சுவைத் துணுக்கொன்றைச் சேர்த்துக் கொண்டேன்: "இந்த விஷயத்தில் என் மனைவி இயேசுவைப் போன்று இருக்கின்றார்கள்!" [2]சீமோன், "தீர்க்கதரிசி" என்ற வார்த்தையைப் பயன்படுத்திய விஷயமானது (லூக். 7:39) அவர் நாயீன் நகரத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டதைக் கேள்விப்பட்டிருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம். [3]சீமோன், "முக்கியத்துவம் வாய்ந்தவர்களைச் சேகரிப்பவராக" இருந்தார் என்று பார்க்ளே என்பவர் கருத்துத் தெரிவித்தார்* (William Barclay, *The Gospel of Luke*, rev. ed., The Daily Study Bible Series [Philadelphia: Westminster Press, 1975], 94). *[4]இயேசு மாம்சத்தில் வந்தபோது, தமது தெய்வீக பண்புகள் சிலவற்றை விட்டிருந்தார் (பிலி. 2:6, 7; மாற். 13:32ஐக் காணவும்). ஆயினும் அவரால் இன்னமும் மனங்களைப் படிக்க முடிந்தது (யோவா. 2:25), மற்றும் அவர் பிறரைப் பற்றி இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவு சிலவற்றைக் கொண்டிருந்தார் (யோவா. 1:48; 4:17, 18). ஒரு அளவிற்கு, அவர் எதிர்காலத்தை முன்னதாகவே கண்ணோக்க முடிந்தது (யோவா. 6:71; மாற். 8:31). விருந்தின்போது அந்தப் பெண் இருப்பாள் என்பதை முன்னதாகவே அவர் கண்டிருக்கலாம். [5]நீங்கள் இதேபோன்ற அனுபவம் கொண்டிருந்தால், அவை எவரொருவருக் கும் சங்கடம் ஏற்படுத்தாத வகையில் இருக்குமென்றால், ஒரு சில விவரங்களைத் தருவதற்கு நீங்கள் விரும்பலாம். [6]பொழுதுபோக்குவித்தல் பற்றி மத்தேயு 14:6ஐக் காணவும். [7]அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கூட, எங்களில் பலர், கிடைக்கின்ற காற்றைப் பற்றிக்கொள்ள முயற்சிப்பதற்காக, கோடைக்காலங்களில் வீட்டின் (திரைகளற்ற) கதவுகளும், ஜன்னல்களும் விரியத் திறந்து வைக்கப்பட்டிருந்ததை நினைவுபடுத்திக் கொள்ளக்கூடிய அளவுக்குப் போதிய வயது வந்தவர்களாக இருக்கின்றோம். அப்பொழுது வீடுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் (அந்நியர்களும் கூட) அலைந்து திரிதல் என்பது மிகவும் சாதாரணமானதாக இருந்தது. [8]நாம் யாவரும் பாவிகளாக இருக்கின்றோம், ஆனால் இந்தப் பெண்ணின் பாவமானது நம்மில் பெரும்பான்மையானோரைச் சீரழிக்கின்ற சாதாரண வகையானதாக இருந்ததாகக் காணப்படுவதில்லை. இவளது பாவங்கள் இவளை அவப் பெயர் கொண்டிருக்கச் செய்திருந்தன. [9]கடன்பட்ட இருவர் பற்றிய இயேசுவின் உவமையானது, அதிகமாய் மன்னிக்கப்பட்டவர் அதிகமாய் அன்புகூருகின்றார் என்று போதிக்கிறது (லூக். 7:47). இந்தப் பெண் அந்த அறைவீட்டில் நுழைந்ததில் இருந்து இயேசுவின்மீது தனது அன்பை அதிகமாய் வெளிப்படுத்தியபடியால், இவள் அந்த அறைக்குள் வருவதற்கு முன்பே மன்னிக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும். [10]இது லூக்கா 7:48, 50ஐ வாசிக்கும்போது நான் பெற்ற மனப்பதிவாக உள்ளது.*

*[11]இவளது மதிப்புமிக்க வாய்ப்பு என்பது, லூக்கா 7:37ல் தரப்படாத ஒரு விவரமான "அந்த ஊர்" இருந்த இடத்தைச் சார்ந்ததாக இருந்திருக்கும். இவள் இயேசுவைக் கண்டோ அல்லது அவர் பேசுவதைக் கேட்டோ இருக்கலாம் என்பது பற்றி இவ்விடத்தில் தரப்படுகிற விவரிப்புகள் இந்த வாரத்திற்கான வேதபாட வாசிப்புப் பயிற்சியில் இருந்து வருகிறவைகளாக உள்ளன. [12]யூதப் பெண்ணானவள் தனது திருமணத்தின்போது தனது கூந்தலை அள்ளிக் கட்டி முடிவாள், பின்பு ஒருக்காலும் அவள் வெளியரங்கமாகத் தனது கூந்தலை அவிழ்த்துத் தாழ்த்திய நிலையில் காணப்பட மாட்டாள். [13]இவ்வகைப்பட்ட பரணியொன்றை அதன் கழுத்துப் பகுதியில் உடைத்தல் என்பது அதைத் திறப்பதற்கான சாதாரணமான வழிமுறையாக இருந்தது. [14]பகுத்துணரும் ஆவியைக் கொண்டிருத்தல் என்பது தீர்க்கதரிசிக்கு உரிய வரங்களில் ஒன்றாக உள்ளது (1 இரா. 14:1-6ஐக் காணவும்). விசேஷமாக, இது மேசியாவான தீர்க்கதரிசியின் விஷயத்தில் உண்மையாக இருக்க*

வேண்டியது (ஏசா. 11:2-4). [15](ஏவப்பட்டிராத) ரபீத்துவப் பாரம்பரியங்களின்படி, பாவம் நிறைந்த பெண்ணொருத்தியால் தொடப்படுதல் என்பது சடங்காச்சார ரீதியில் ஒருவரை அசுத்தமானவராக்கும். [16]''போதகரே'' என்பது கிரேக்க வார்த்தையின் நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது. இது சீமோன், இயேசுவுக்குப் பயன்படுத்திய மதிப்பிற்குரிய பட்டமாக - அநேகமாக வஞ்சகப் புகழ்ச்சியாகப் பேசப்பட்டதாக இருக்கும், ஏனெனில் கிறிஸ்து தேவனுக்காகப் பேசுபவர் (அதாவது தீர்க்கதரிசி) அல்ல என்று அந்தப் பரிசேயன் ஏற்கனவே முடிவு செய்திருந்தார். [17]KJVயில் “pence” என்றுள்ளது, சில மொழிபெயர்ப்புக்களில் “shilling” அல்லது வேறு ஏதாவது பணப்புழக்க அலகைக் கொண்டுள்ளன. மூலமொழியில் “denarii” என்றுள்ளது. [18]ஒரு தினேரியம் என்பது 17சென்ட்டுகளுக்கு[சுமார் 7 ரூபாய்க்கு]ச் சமமானது என்று கூறுதல் விளக்கவுரையாளர்களுக்கு பொதுவானதாக உள்ளது, ஆனால் இந்த மதிப்பீடானது பல ஆண்டுகளுக்கு முற்பட்ட கூலிகளின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்! நீங்கள் வாழ்கின்ற பகுதிக்குப் பொருத்தமாயிருப்பதற்கு, ஐம்பது தினேரியங்களையும் ஐந்நூறு தினேரியங்களையும் உங்கள் பகுதியின் பணப்புழக்கத்தில் மாற்றிக் கணக்கிட்டுக் கூறுங்கள். [ஐம்பது தினேரியங்கள் என்பது சுமார் 350 ரூபாயையும், ஐந்நூறு தினேரியங்கள் என்பது சுமார் 3,500 ரூபாயையும் குறிப்பிடுவதாக இருக்கும்.] [19]போதகர்களுக்கெல்லாம் போதகர் என்ற வகையில் இயேசு, தமது சீஷர்களிடத்தில் தமது கதையின் நீதிபோதனையை நேரடியாகக் கூறுவதற்குப் பதிலாக, அதைக் கூறும்படி அவர்களிடத்திலேயே அடிக்கடி கேட்டார். இது கற்றல் செயல்பாட்டிற்கு இன்றியமையாததான சிந்தித்தலைத் தூண்டிற்று. [20]கடன்கொடுப்பவர்கள் பற்றிய எனது விளக்கவுரையானது, வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் இருந்த கடன் கொடுப்பவர்கள் மற்றும் அமெரிக்க நாட்டின் சில பகுதிகளில் ஏழ்மையான பகுதிகளில் உள்ள மனச்சாட்சியற்ற கடன் கொடுப்பவர்கள் ஆகியோரின் அடிப்படையில் உள்ளது. நீங்கள் வாழ்கின்ற பகுதிக்கு ஏற்றாற்போன்று வார்த்தைகளை அமைப்பது நன்றாயிருக்கும் [உதாரணமாக, நாம் ''கெந்துவட்டிக்காரர்'' அல்லது ''ஈட்டிக்காரர்'' போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தலாம்.] (நீங்கள் தேவைப்படும் நிதி உதவியை கடன் கொடுக்கும் தனிநபர் ஒருவரிடம் இருந்து கடனாகப் பெறுவதைப் பொதுவான நடைமுறை வழக்கமாகக் கொண்டுள்ள இடத்தில் வசிப்பவராக இருக்கலாம்.) ஏற்புடையதென்றால், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நீங்கள் நான் விவரித்துள்ள வகையிலான கடன் தருபவர்களிடம் வரவு செலவு வைத்துக் கொள்ளுதலுக்கு எதிராக எச்சரிக்கை செய்ய விரும்பலாம்.

[21]இயேசுவின் உவமைகளில் அவர் பெரும்பாலும் பொதுவாக உண்மையாயிருந்தவற்றைப் பற்றியே வழக்கமாகப் பேசினார். ஆயினும் அவ்வப்போது, அவரது விவரிப்புகள் விதியாக இருப்பதற்குப் பதில் விதிவிலக்குகளாக[வும்] இருந்தன (மத். 20:12ஐக் காணவும்). [22]Alfred, Lord Tennyson, *Geraint and Enid;* quoted in W. Emery Barnes, *The Forgiveness of Jesus Christ* (New York: MacMillan Co., 1936), 53. [23]Adapted from James Burton Coffman, *Commentary on Luke* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1975), 147. [24]இந்த உவமையானது சீமோன் (ஐம்பது தினேரியம் கடன்பட்டவர்?) மன்னிக்கப்பட்டார் என்று போதிப்பதாக ஒருவர் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது இன்னொரு இணைவற்ற தன்மையாக உள்ளது. ஒரு உவமையின் விவரங்கள் வலியுறுத்தப்படலாகாது. “கிறிஸ்துவின் வாழ்வு, 3” என்ற புத்தகத்தில் உவமைகள் பற்றிய கலந்துரையாடலில் காணவும். [25]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 198. [26]William Barclay, *The Gospel of Luke*, rev. ed., The Daily Study Bible Series (Phila-

delphia: Westminster Press, 1975), 95. [27]*அவர்கள் இவ்வார்த்தைகளை வெறுமனே நினைத்தார்களா அல்லது ஒருவருக் கொருவர் கிசுகிசுத்துக் கொண்டார்களா என்பது பற்றி வேதபாடப் பகுதி தெளிவாய்க் கூறுவதில்லை.* [28]*மீண்டும் ஒருமுறை, இயேசு தேவனுக்குச் சமமாயிருப்பதாக உரிமை கோரினார் (மாற். 2:5-12ஐக் காணவும்).* [29]*வசனம் 50ல் "துடனே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க முன்னிடைச் சொல்லான eis என்பது உண்மையில் "க்குள்" என்ற நேரடியான அர்த்தம் தருவதாக உள்ளது.* [30]*உலகில் நான் வாழும் பகுதியில், "முதலில் நீங்கள் வரவேற்புப் பாயை இடவேண்டும்" என்ற சொல் வழக்கு பயன்படுத்தப்படுகிறது.*